O.S. No. 90/2023 **நாள்**: 06.03.2026

நீலகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 2026ம் ஆண்டு மார்ச் மாதத்தில் 6-ம் நாள் **வாதி ஹனுமந்தைய்யா PW-1** என்பவரின் சாட்சியம் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி. ராமலட்சுமி, உதவியாளர் நிலை-3 என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **ஹனுமந்தைய்யா** | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | லக்கைய்யா | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | 48 |
| தாலூக்கா | : | | சாதி | : | |

---

**(இந்த வழக்கின் வழக்குரையில் வாதி தனது வயது 56 என்று குறிப்பிட்டுள்ள நிலையில் தற்போது வாதி தனது வயது 48 என்று கூறுவதால் வாதியின் அடையாளம் சரிபார்க்க அவரது ஆதார் அடையாள அட்டை அசல் நீதிமன்றத்தால் பெறப்பட்டு சரிபார்க்கப்பட்டு, வாதி அவர்தான் என்று உறுதிசெய்யப்பட்டது).**

<u>வாதி தரப்பு முதல் விசாரணை :</u>

நான் இந்த வழக்கில் **வாதி** ஆவேன். இன்று, நான் முதல் விசாரணை சாட்சியத்தினை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளைப் படித்து கேட்டு தெரிந்து கொண்டேன். அவைகள் யாவும் சரியானவை என்று நான் உறுதி கூறுகிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 13.01.2003 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் பதிவாளர் அலுவலக இணையவழி சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 09.08.2023 தேதியிட்ட TSLR Extract-ன் இணையவழி சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(வேண்டுகோளின் பெயரில் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

Loganathan Prakash

Digitally signed by Loganathan Prakash
Date: 2026.03.06 11:27:03 +0530